# மகாபாரதம்

## பாகம்–1



## பாலகுமாரன்

# மஹாபாரதம்

நான் முயற்சிக்கட்டுமா என்று அர்ஜுனன் அனுமதி கேட்டான்.

அடேய் சிறுவா, உட்காரப்பா என்று பின்னால் இருந்த கிழவர் கத்தினார். நிச்சயம் இவன் பின்பக்கத்தை நசுக்க வேண்டும் என்று கோபம் பீமனுக்கு எழுந்தது. அவன் திரும்பி அந்தணரை முறைத்தான்.

"இந்தப் பையன் பாட்டுக்கு எழுந்து போய் நிற்கிறான். இவனால் வில் வளைக்க முடியவில்லையென்றால் ஊரிலுள்ள அத்தனை அந்தணர்களை அல்லவா சிரிப்பாய் சிரிப்பார்கள். பார்ப்பானுக்கு வந்த ஆத்திரத்தை பார்த்தாயா" என்று நம்மையல்லவா குறைகூறுவார்கள் . அடக்கமாய் இருக்க வேண்டியது இவர்களுக்கு மறந்து போயிற்றா. வந்ததிலிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறேன். ஓயாத பேச்சுஎப்படியெல்லாம் தத்துவம் கொடுக்கிறார்களையா.யாரை நோக்கியும் பேசாது உரத்த குரலில் கத்தினார் அது எல்லோருக்கும் கேட்டது.

என்ன தவறு? எதிர் பக்கத்திலிருந்து குரல் வந்தது. அந்தணர்கள் முயற்சிக்கக்கூடாது என்று எங்கு எழுந்திருக்கிறது.

அனுமதிக்க வேண்டியவரே சரி என்று சொல்லிவிட்டார். கூடாது என்று சொல்ல உமக்கென்ன யோகியதை. வாயை பொத்திக்கொண்டிரும்.

வளைக்கவில்லையென்றால் அவமானமில்லையா?

வளைத்துவிட்டால் மிகப்பெரிய கௌரவம் இல்லையா மாறி மாறி பேசிக் கொண்டிருந்தார்கள்.

வளைக்கலாமா கூடாத சபையின் அங்கீகாரம் தேவையில்லை. யார் அனுமதிக்க வேண்டுமோ அவர்கள் அனுமதித்து விட்டார்கள். ஆகவே இந்த இளைஞன் முயற்சி செய்யட்டும்.

நான் எழுந்து போகிறேன் இங்கு அவமானப்பட தயாராய் இல்லை. அந்த அந்தணர் எழுந்து துண்டு உதறி தான் எதிர்ப்பை காட்டி சபையிலிருந்து நகர்ந்து வாசல்பக்கம் போய் அர்ஜுனன் என்ன செய்வான் என்று பார்த்துக்கொண்டிருந்தார். வளைக்க மாட்டான் என்று எண்ணம் அவரிடம் திடமாக இல்லை. வளைப்பான் என்ற எண்ணமும் ஏற்படவில்லை. உலகத்தில் நூற்றுக்கு தொன்னூற்றொன்பது ஜனங்கள் இடதும் இல்லாமல் வலதும் இல்லாமல் இரண்டு பக்கமாகவும் இருக்கிறார்கள்.

"இந்த சிறுவன் வளைத்துவிடுவானா? ஒரு அந்தணர் இன்னொரு அந்தணரை பார்த்து கேட்டார். வந்து விட்டோம் வேடிக்கை பார்க்க. வேடிக்கை பார்த்து விட்டு எழுந்து போவோம்மையா.

போகும் போது பசியாறிவிட்டு நன்கு ஒரு தூக்கம் போட்டுவிட்டு தான் போக வேண்டும். அவர் அவருடைய காரியத்தில் கண்ணாக இருந்தார்.

"இவன் இந்த அந்தணன் வளைத்து விடுவானா என்று கேட்டேன்"

அவன் அந்தணன் என்று எங்கே சொன்னான் குயவர் தெருவில் இருந்து வருவதாக அல்லவா சொன்னான்.

ஆனால் முப்புரிநூலும் குடுமியும் திருத்திருக்கிறானே.

வேஷம் போட்டவனாக இருக்கலாம்.அந்தணன் போல வேஷம் திரித்துக் கொண்டு வந்திருக்கலாம். நமெக்கென்ன வில் மேலே விழாது ஜாக்கிரதையா  உட்கார்ந்து கொள்ளவோம்.

இவன் தான் கடைசி, பிறகு சோறு தான் . வீடு ஒரு அந்தணர் இடையில் புகுந்து பேசினார். வெள்ளை வெளேர் என்று அன்னம். எல்லா காய்கறிகளும் போட்டு கூட்டு. சின்ன சட்டி நிறைய நெய் பெரிய சட்டி நிறைய தயிர். இரெண்டாம் முறையும் மூன்றாம் முறையும் அன்னம் பரிமாறுகிறார்கள்.பருப்பு கலந்த காய்கறி குழம்பும். தயிர் கலந்த அன்னமும் எத்தனை சுவையாக இருக்கின்றன.

அர்ஜுனன் வில்லை வலம் வந்தான். கைகூப்பினான். வில்லில் உள்ள ...............